1981 மார்ச் 27]

தண்ணீர் தான் தருவோம் என்று சொல்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதிக்கு சாத்தனூர் டாம் வலது கரைக் கால்வாயிலிருந்து தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, பொன்னியாற்றில் வெள்ளம் ஏற்படும் காலங்களிலும், திருக்கோவிலூர் அணைக்கட்டு மற்றும் எல்லிஸ்சத்திரம் அணைக்கட்டுகள் நிரம்பி வழியும் போது மட்டுமே, மணிமுத்தா நதியில் கடும் வறட்சி ஏற்படும்போது, சாத்தனூர் அணை நீரை இராமராஜபுரம் அணைக்கட்டுக்கு விடுவதை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு அதைப்பற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு திருத்திய மதிப்பீடுகள் தயாரித்து வேலைகள் நடைபெற அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10-00)

திரு. ஆர். தியாகராசன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தண்ணீர் விடுவதற்கான வேறு ஏதாவது உதவியைச் செய்வதற்குத் திட்டங்கள் உண்டா என்றுதான் கேட்டேன். ஆகவே மீண்டும் கேட்கிறேன். அந்தப் பகுதி மக்களுக்கு பாசனத்திற்குத் தண்ணீர் கொடுப்பதற்கு வேறு ஏதாவது திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மணிமுத்தா நதியில் கடும் வறட்சி ஏற்படும்போது சாத்தனூர் அணை நீரை இராமராஜபுரம் அணைக்கு கொடுப்பதற்குரிய ஒரு புதுத் திட்டத்திற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதைத் தான் நான் ஏற்கெனவே தெரிவித்தேன்.

மதுராந்தகம் ஏரியில் ஆக்கிரமிப்புகள்

*வினா எண் 518—**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஏரியின் உள்ளே சிலர் ஆக்கிரமித்து உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இந்தச் சட்ட விரோத ஆக்கிரமிப்பால் சுமார் 2,000 ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஏரியின் நீர் பிடிப்பு புறம்போக்கு நிலங்களில் 129.69 ஏக்கர் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புக்களை அகற்ற பொதுப்பணித் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) இந்த ஆக்கிரமிப்பால் ஏரியின் கீழுள்ள ஆயக்கட்டு நிலங்கள் பாதிக்கப்படவில்லை.

[1981 மார்ச் 27

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்பால் அங்கு பயிர் செய்கின்ற விவசாயிகளுக்கு மிகவும் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று அவர்கள் ஒவ்வொரு ஜமா பந்தியிலும் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கிறோம் என்று அதிகாரிகளும் உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள. அந்த உறுதிமொழியினை அவர்கள் காப்பாற்றவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்பால் சுமார் 2,000 ஏக்கர் அளவுக்கு விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மதுராந்தகம் ஏரியின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டுகள் சுமார் 3,000 ஏக்கர். ஏரியின் நீர்ப்பிடிப்பு புறம்போக்கு நிலங்களில் 129.69 ஏக்கர் நிலங்களில் 246 ஆக்கிரமிப்புக்காரர்கள் பயிர் செய்யும் சூழ்நிலை இருந்து வருகிறது. அவர்களை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்பு குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா? மேலும் மதுராந்தகம் ஏரி, அங்குள்ள பாசனத்திற்கு மிகவும் முக்கியமான ஏரியாகும். இந்த ஏரி பல்லாண்டு காலமாக பழுது பார்க்கப்படாமல் இருக்கிறது. 1969-ஆம் ஆண்டு வறட்சி ஏற்பட்டபோது அன்றைய தினம் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களை அந்த ஏரிக்கே அழைத்து வந்தார்கள். ஆனால் அந்த ஏரியானது செப்பனிடப்படாமல் இருக்கின்றது ஆகவே இனிமேலாவது அதைச் செப்பனிடும் பணி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜசிங்கமங்கலம் கண்மாய்

*வினா எண். 519 — திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுமார் 12 ஆயிரம் ஏக்கர் பாசன வினியோகத்திற்கான ராஜசிங்கமங்கலம் கண்மாய் வைகை ஆயக்கட்டு நீர்ப்பாசன திட்டத்துடன் சேராமல் இருப்பது அரசுக்குத்தெரியுமா?